நிலையில் உள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னாலே சில பெரியோர்கள் நிதி உதவி அளித்தார்கள். அந்த வகையிலே நானும்கூட 50,000/– ரூபாயினை அந்தத் திருக்கோயிலுக்கு அளித்து ஒரு மண்டபத்தைப் புனரமைப்புச் செய்ய ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கடந்த 4 மாதங்களுக்கு முன்னாலே காஞ்சிப் பெரியவர் அவர்கள் அந்தக் கோயிலுக்கு வருகை தந்து, அக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு ஆவன செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், கடந்த 2 வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திருப்பணியைத் தொடர்ந்து செய்ய முடியாமல், போதிய நிதி ஆதாரம் இல்லாமல் கிடப்பிலே இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தத் திருக்கோயிலின்மீது கவனம் செலுத்தி, இந்தத் திருக்கோயிலில் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யவேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நலிவுற்றிருக்கின்ற அனைத்து ஆலயங்களும் தேர்வு செய்யப்பட்டுத்தான், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,822 ஆலயங்களில் திருப்பணி செய்திருக்கிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்—வைத்திருக்கின்ற கோரிக்கை—பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன; இன்னும் அந்தப் பணிகள் முடிவடையவில்லை என்று சொன்னார்கள். கூடிய விரைவில் அந்தத் திருப்பணிகள் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

4–

**அருள்மிகு முருகன் திருக்கோயில்**

***38860–திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2004 பிப்ரவரி 5]

(அ) சென்னை, போரூரிலுள்ள பல்லவர் கால அருள்மிகு முருகன் திருக்கோயிலை அறநிலையத் துறை ஏற்று நடத்த, மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை போரூரில் அமைந்துள்ள முருகன் திருக்கோயில் எனப்படும் பாலமுருகன் திருக்கோயிலின் தற்போதைய நிர்வாகி, தன்னைப் பரம்பரை அறங்காவலர் என அறிவிக்கக் கோரி இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவுகளின்கீழ் தாக்கல் செய்துள்ள மேல் முறையீடு, ஆணையர் முன்பு நிலுவையில் உள்ளது. ஆணையர் இதுகுறித்துத் தீர்ப்பு வழங்கியபின், மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலானது, பக்கத்திலே இருக்கின்ற உத்திர இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாத ஈஸ்வரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலே அமைந்திருக்கின்றது. ஆரம்பத்தில் ஓலைக் குடிசைகளாக இருந்த இந்தத் திருக்கோயில், படிப்படியாக 14 பேர் கொண்ட ஒரு குழுவினரால் மிகப் பெரிய அளவிலே கட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் திருக்கோயிலுக்குத் தனியாக யாரும் பரம்பரை அறங்காவலர்களாக உரிமை கொண்டாட முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, பல ஆண்டு காலமாக நிலுவையிலே இருக்கின்ற இந்த மேல் முறையீட்டு மனுவை இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் அவர்கள் விரைவில் விசாரித்து முடிவிற்குக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போரூரில் அமைந்துள்ள முருகன் திருக்கோயில் எனப்படும் பாலமுருகன் திருக்கோயில், பல்லவர் காலத்திய தொன்மை வாய்ந்ததல்ல. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், 1970–க்குப் பிறகே வளர்ச்சி பெற்றது. மேற்படி திருக்கோயில் புல எண் 365–ல் 8 கிரவுண்ட் இடத்தில் அமைந்துள்ளது. அந்த இடம் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அருள்மிகு இராமநாத ஈஸ்வரர் திருக்கோயிலுக்குச்

சொந்தமானது. மேற்படி முருகன் என்கிற பாலமுருகன் திருக்கோயிலுக்கு சொத்துகள் ஏதும் இல்லை. மேற்படி திருக்கோயிலின் தற்போதைய நிர்வாகி, தன்னைப் பரம்பரை அறங்காவலர் என அறிவிக்கக் கோரி, இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு *63*–ன்கீழ் சென்னை இணை ஆணையரிடம் ஓ.ஏ.*2/88*–ல் மனுத்தாக்கல் செய்து, அது தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது. ஆணையர் நீதிமன்றத்தில் உள்ள ஏ.பி. எண் *2/98* தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தனியார் திருக்கோயில்களை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முற்படும்போது, அறநிலையத் துறையினுடைய கொடைகள் சட்டப் பிரிவிற்கு ஒரு மனுவை அனுப்பி, தடையாணை என்ற பெயரில் அந்த நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போட்டு விடுகிறார்கள். இதனால், பல திருக்கோயில்களில் திருப்பணிகள்கூட நடைபெறாமல் இருக்கின்றன. எனவே, இப்படி முட்டுக்கட்டை போடாமல் இருப்பதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வரவும், இப்படிப்பட்ட பல திருக்கோயில்களைத் தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதற்கு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தனியாக ஒரு குழுவை அமைத்து வழக்குகளை விரைந்து முடித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் என்பது வேறு, நீதிமன்றம் என்பது வேறு. நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளை நீதிமன்றத்தின் மூலம்தான் முடிக்க வேண்டுமே தவிர, சட்டமன்றத்தின் மூலம் முடிக்க முடியாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *5*, திரு. கே.என். சேகரன், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

LEGISLATURE
TRUTH ALONE TRIUMPHS